இதிலே மாற்றம் செய்து கொண்டு வருகிறார்கள். அங்கேயிருந்து பதில் எழுதி அனுப்புகின்ற நேரத்திலும் ஆதிதிராவிடர்கள் என்று திருத்தி எழுதி அனுப்பவேண்டும் என்று சொல்லி, அவர்களும் அவ்விதம் செய்து வருகிறார்கள்.

இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் உள்ள நிலம் காடு புறம்போக்கு என்ற அளவில் காலம் காலமாக இருந்தது. அந்தக் காட்டுப் புறம்போக்கை ரெவின்யு துறை எடுத்துக்கொள்வது என்று எடுத்துக்கொண்ட பிறகு அதிலே மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள். ஆக்கிரமிப்பு செய்த 203 பேரும்—ஒருவரைத் தவிர—அவர் யகுத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்—ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பல இனத்தவர் அதிலே இருக்கின்றனர். பெயரைச் சொல்ல வேண்டுமானாலும் சொல்கிறேன். (குறுக்கீடு) அது யாருக்கும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலம் அல்ல. அங்கே ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு அதை ஒதுக்க இருக்கிறோம். அதை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்க முடிவு செய்துள்ளதால், அங்கேயுள்ள அத்தனைபேரும்—ஒருவரைத் தவிர—ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அவர்களுக்கு அந்த இடம் நான் ஏற்கனவே குறிப்பிட்ட அடிப்படையில் ஒப்படை செய்யப்படும்.

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

*வினா எண் 267—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையாளிப்பாரா—

புயல் பாதுகாப்பு இல்லங்களில் இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் பொது மக்களுக்கு கல்வி, தையல் ஆகியவைகள் கற்றுத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள், பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கும், முதியோர் கல்வி போதிப்பதற்கும், குடும்ப நலக் கூட்டங்கள், கல்யாணங்கள் நடத்துதல் போன்ற சமுதாய நிகழ்ச்சிகளுக்கு இந்தக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள மைய அரசின் சட்டங்கள்

வினா எண். 268—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—